**Date: 14/10/2020**

**DVA 597/2019**

ம.சா. 1 ஜாஸ்மின்

சாட்சி ஆஜர், சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் என் முதல் விசாணையில் எனக்கு இஸ்லாமிய முறைப்படி 2 முறை திருமணம் நடந்ததாகக் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எங்கள் சன்னி பிரிவு வழக்கப்படி எனது பெற்றோர்கள் எனக்கு போட்ட நகைகளில் 10ல் 1 பங்கு நகையை 1ம் எதிர்மனுதாரர் எனக்கு கொடுக்க வேண்டும் என்றால் அப்படி இல்லை. அவங்களின் இஷ்டப்படி கொடுக்கலாம். 1ம் எதிர்மனுதாரர் எனக்கு 1 1/2 பவுன் நகை கொடுத்தார் என்றால் ஆமாம். அது என்னிடம் உள்ளது. திருமணத்தின் போது எனக்கு என் பெற்றோர்கள் 50 பவுன் நகைளை 1ம் எதிர்மனுதாரருக்கு கொடுத்ததாகக் கூறியிருப்பது பொய் என்றாலும், திருமணத்தின் போது எனக்கு என் பெற்றோர்கள் 15 பவுன் நகைகள் மட்டுமே போட்டனர் என்றாலும் சரியல்ல. எனக்கு என் பெற்றோர்கள் 50 பவுன் நகை போட்டனர். அதனுடன் என் மாமனாருக்கு 5000 ரியால் கொடுக்கப்பட்டது. 5000 ரியால் கொடுக்கப்படவில்லை என்றாலும், இந்திய ரூபாயில் 15,000/- மட்டுமே கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. என்னுடைய அப்பாவும், என் மாமனாரும் மெக்காவில் இருந்தனர். அதனால் என் தந்தை மாமனாரிடம் 5000 ரியால் கொடுத்தார். இந்தியாவில் கூடலூரில் என் திருமணம் நடந்த சமயத்தில் 15,000/- மட்டுமே கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் திருமணத்திற்காக மெக்காவில் தான் பணம் கொடுக்கப்பட்டது. என் தந்தை என்ன வேலை செய்தார் என்றால் மெக்காவில் டெய்லராக இருந்தார். அங்கு அவர் சம்பளமாக சுமார் 1000 ரியால் பெற்று வந்தார் என்றால் தற்போது எனக்கு நினைவிலில்லை. கூடலூர் தேவர்சோலையில் எனது பெற்றோருக்கு எங்கள் வீட்டை தவிர வேறு எந்த சொத்தும் இல்லை என்றால் சரிதான். நான் திருமணமானதிலிருந்து தற்போது வரை வேறு வேலைக்கு சென்றதில்லை என்றால் ஆமாம். சுமார் 15 சவரன் தங்க நகைகளை விற்று அந்தப் பணத்தை வீடு கட்டுவதற்காக எதிர்மனுதாரருக்கு கொடுத்தது சம்மந்தமாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நகையை விற்று பணமாகக் கொடுக்கவில்லை. நகைகளை அப்படியே எதிர்மனுதாரரிடம் கொடுத்து விட்டேன். என் மாமியார் குழந்தைகள் உண்ணும் உணவில் மண்ணெண்ணெய் கலந்துது கொல்ல முயற்சித்தது சம்மந்தமாக நான் ஏதேனும் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சம்பவம் எப்போது

நடந்தது என்றால் 2000 முதல் 2005, 2008க்குள் இருக்கும். குழந்தைகள் 3 பேரும் பாடந்துறையில் என்னுடன் தான் இருந்தனர் என்றால் எனது பெற்றோர்கள் வசம் தான் இருந்தனர். என்னைப் பார்க்க வேண்டும் என்று குழந்தைகள் கேட்டால் நான் இருக்கும் வீட்டில் கொண்டு வந்து விடுவார்கள். நான் சவுதி மெக்காவில் எவ்வளவு நாள் இருந்தேன் என்றால் 11 வருடங்கள் அங்கிருந்தேன். லீவுக்காக இங்கு வந்து 9 மாதங்கள் இருந்துள்ளேன். நான் மெக்காவில் இருந்த சமயத்தில் என் 3 குழந்தைகளும் எதிர்மனுதாரரின் பெற்றோர்களுடன் அவர்கள் வீட்டில் தான் இருந்தனர் என்றால் சரியல்ல. என் பிரமாண வாக்குமூலத்தில், என் குழந்தைகளின் படிப்பு செலவினை யார் செய்தார்கள் என்ற விபரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன் . குழந்தைகளின் படிப்பு, மருத்துவம் மற்றும் அனைத்து செலவுகளையும் எப்போதுமே எதிர்மனுதாரர் தான் செய்துள்ளார் என்றாலும், அதனால் தான் நான் என் பிரமாண வாக்குமூலத்தில் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என் பெற்றோர்கள் தான் குழந்தைகளை தங்களுடன் வைத்துக் கொண்டு அவர்களுக்கு செலவு செய்தனர். குழந்தைகள் பத்தாம் வகுப்பு வரை கூடலூர் ஹோலி கிராஸ் பள்ளியில் தான் படித்தார்கள் என்றால் ஆமாம். என் தந்தை சவுதியில் தான் டெய்லராக இருந்தார் என்றால் ஆமாம். நான், 1ம் எதிர்மனுதாரர் மற்றும் என் பெற்றோர்கள் அனைவரும் சவுதியில் ஒன்றாகத்தான் வசித்தோம் என்றால் ஆமாம். அங்கு வசிக்கும் வரை எங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லாமல் சந்தோசமாகத்தான் வாழ்ந்தோம் என்றால் எதிர்மனுதாரர் மட்டும் என்றால் எந்த பிரச்சனையும் இல்லை. பாடாந்துறையில் புது வீடு எந்த வருடத்தில் கட்ட ஆரம்பித்தோம் என்றால் வீடு கட்ட ஆரம்பித்து 7 வருடங்கள் இருக்கும். அதன் பட்ஜெட் 20 இலட்சம் இருக்குமா என்றால் 30 லட்சமே இருக்கும். வீடு கட்ட நான் 12 1/2 இலட்சம் கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். மேற்படி பணத்தை எவ்வாறு செலுத்தினேன் என்றால் என் தந்தை முதல் தடவை 10 லட்சத்தை எதிர்மனுதாரரிடம் பணமாக கொடுத்தார். எப்போது கொடுத்தார் என்றால் சுமார் 4 வருடங்களுக்கு முன்பு கொடுத்தார். அது தவிர வீடு கட்டுவதற்காக 4 வருடங்களுக்கு முன்பாக நகையும் கொடுத்தேனா என்றால் ஆமாம். தற்போது வரை வீடு கட்டி முடிக்கப்பட்டதா என்றால் 2 வருடங்களுக்கு முன்பாகவே வேலை முடிந்து குடி போய் விட்டோம். நான் உண்மையாகவே பணம் கொடுத்திருந்தால் வீட்டு வேலை முன்பே முடிந்திருக்கும் என்றாலும், தற்போது வரை வீட்டு கட்டட வேலை முடியவில்லை என்றாலும் சரியல்ல. வீட்டு வேலை முடிந்து விட்டது. என்னையும் குழந்தைகளையும் கோவைக்கு அனுப்பிய பின் தான் வீட்டில் குடியேற வேண்டும் என்று எதிர்மனுதார் முடிவு செய்து விட்டு அன்பாக பாசமாக என்னை குழந்தைகளுடன் சென்று கோவையில் இரு என்று அனுப்பி வைத்தார். எங்கள் வீட்டு பூட்டு உடைத்து மாமனார் மாமியார் இருவரும்

அங்கு குடியிருந்து வருவதாக நான் கூறியுள்ள சங்கதி குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.